**அரையாண்டுத்தேர்வு - மாதிரி வினாத்தாள் --- 2 ( 2019 )**

# பன்னிரெண்டாம் வகுப்பு

# வணிகவியல்

நேரம் : 15 நிமிடங்கள் + 3.00 மணி மதிப்பெண் : 90

## பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 × 1 = 20

1. மேலாண்மை என்பது ஒரு ------------

அ) கலை ஆ) கலை மற்றும் அறிவியல் இ) அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

2. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?

அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது

ஆ) நடவடிக்க்கைகளை மதிப்பீடு செய்வது

இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது

ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

3. அரசு பத்திரங்கள்(அ) பிணையங்கள், நிறும கடனீட்டு பத்திரங்கள் போன்றவை ----------- சந்தைக்கு உதாரணங்கள் ஆகும்.

அ) அரசு சந்தை ஆ) நிதிச் சந்தை இ) பத்திரச் சந்தை ஈ) கடன் சந்தை

4. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு -------------

அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரதஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

5. PAN என்பதன் விரிவாக்கம் ---------------- ஆகும்.

அ) நிரந்தர தொகை எண் ஆ) முதன்மை கணக்கு எண்

இ) நிரந்தர கணக்கு எண் ஈ) நிரந்தர கணக்கு வாரிசு

6. தவறான கூற்று யாது?

அ) நவீன சந்தையியலின் தத்துவம் மற்றும் தலையாய நோக்கம் என்பது, நுகர்வோரை திருப்தி செய்வது என்பதாகும்.

ஆ) நுகர்வோரை உச்சபட்ச அளவில் திருப்திபடுத்துவதன் மூலம், ஒரு அறிவார்ந்த வியாபாரி அல்லது உற்பத்தியாளர் தனது இலாபத்தை அதிகப்படுத்திக் கொள்கிறார்.

இ) பற்றாக்குறை நேரத்தில், பீதியுடன் நுகர்வோர் பொருட்களை வாங்குவது மூலம் கள்ளச் சந்தை உருவாவதை தடுக்கலாம்.

ஈ) பொருட்களை வாங்கும்பொழுது, நுகர்வோர் அப்பொருட்களைப் பற்றிய அனைத்து விதமான தகவல்களையும் கேட்டுப் பெற வேண்டும்.

7. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகளில் சேராதவை -----------

அ) பாதுகாப்பில் உரிமை ஆ) தகவல் பெறும் உரிமை

இ) கேட்கும் உரிமை ஈ) புகார் அளிக்கும் உரிமை

8. விலைபெறாத வணிகர் கீழ்க்குறிப்பிட்டுள்ள எந்த தகுநிலையில் சரக்கினை வைத்திருக்கும்போது பற்றுரிமை செலுத்தமுடியும்?

அ) பொருளின் உரிமையர் ஆ) வாங்குநரின் முகவர்

இ) வாங்குநரிடம் ஒப்படைக்கப்பட்டவை ஈ) மேற்கூறிய அனைத்து தகுநிலையிலும்

9. நாட்டில் ----------- பங்குச் சந்தைகள் உள்ளன.

அ) 21 ஆ) 24 இ) 20 ஈ) 25



10. கீழ்கண்டவற்றில் கட்டுபாடற்ற சந்தை எது?

அ) ஒழுங்குமுறை சந்தை ஆ) முறையற்ற சந்தை

இ) ஒழுங்குமுறையற்ற சந்தை ஈ) களச்சந்தை

11. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?

அ) மாவட்ட நீதிபதி ஆ) உயர் நீதிமன்ற நீதிபதி

இ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ) மேல குறிபபிடப்பட்டவை எதுவும் இல்லை

12. -------------- புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.

அ) உலகமயமாக்கல் ஆ) தனியார்மயமாக்கல்

இ) தாராளமயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமே இல்லை

13. பயிற்சி முறைகளை ---------------- பயிற்சி என வகைப்படுத்தலாம்.

அ) வேலை சுழற்சி மற்றும் வேலை செறிவூட்டல்

ஆ) பணிவழி மற்றும் பணிவழியற்ற பயிற்சி

இ) வேலை பகுப்பாய்வு மற்றும் வேலை வடிவமைப்ப

ஈ) உடல் மற்றும் மனம்

14. வேறுபட்ட ஒன்று எது?

அ) திட்டமிடுதல் ஆ) திரட்டுதல் இ) அமைத்தல் ஈ) இயக்குவித்தல்

15. கூற்று ( A ) : அரசு பத்திரங்கள் உத்தரவாதமாக வட்டி வழங்குவதால் அதில் முதலீடு செய்வது பாதுகாப்பானதாகும

காரணம் (R) : அரசே முதன்மை தொகையை திரும்ப செலுத்துவதால் முற்றிலும் பாதுகாப்பு தன்மை கொண்டதாகவும் இருக்கிறது

அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.

ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்

இ) A சரி ஆனால் R தவறு

ஈ) A தவறு ஆனால் R சரி

16. A என்பவர் B -க்கு விற்பனை செய்கிறார் B என்பவர் C -க்கு விற்பனை செய்கிறார். C என்பவர் D -க்கும், D என்பவர், E- க்கும் விற்பனை செய்கிறார். இவ்வாறு செய்யப்படும் அனைத்து விற்பனையில் A வுக்கு விற்பனை கழிவு உண்டு.எனில், இது எத்தகைய சந்தையிடுதலுக்கு எடுத்துக்காட்டாகும்?

அ) பரிந்துரை சந்தையிடுதல் ஆ) உள்ளடக்க சந்தையிடுதல்

இ) வைரல் சந்தையிடுதல் ஈ) பல்நோக்கு அளவு சந்தையிடுதல்

17. சிறப்பு தீர்மானம் ----------------- க்கு தேவைப்படுகிறது.

அ) கடனீட்டுப் பத்திரத்தை மீட்க ஆ) பங்காதாயம் அறிவிக்க

இ) இயக்குநரை பணியமர்த்த ஈ) தணிக்கையாளரை பணியமர்த்த

18. தகுதிகாண் காலம் --------------

அ) ஒன்று முதல் இரண்டு ஆண்டு வரை

ஆ) ஒன்று முதல் மூன்று ஆண்டு வரை

இ) இரண்டு ஆண்டு முதல் நான்கு ஆண்டு வரை.

ஈ) இவற்றில் எதுவுமில்லை

19. பொருத்துக

1. குரல் வாக்கெடுப்பு --- a. பிரபலமான வாக்கெடுப்பு முறை
2. திறந்த நடைமுறை ---- b. அறிவியல் சார்ந்த முறை அல்ல
3. இரகசிய வாக்கெடுப்பு --- c. அதிநவீன வாக்கெடுப்பு முறை
4. எந்திர வாக்கெடுப்பு ---- d. வாக்கெடுப்பில் ஒளிவு மறைவு இல்லை

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | d | a | b | c |
| ஆ. | b | a | d | c |
| இ. | b | d | a | c |
| ஈ. | a | b | c | d |

20. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக் குழுவின் தலைவர் -------------------

அ) உச்ச நீதிமன்ற நீதிபதி ஆ) உயர் நீதிமன்ற நீதிபதி

இ) மாவட்ட நீதிபதி ஈ) நிதி மந்திரி

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. டேலரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை?
22. மாற்று இயக்குனர் என்றால் என்ன?
23. பரஸ்பர நிதி என்றால் என்ன?
24. பணச்சந்தையில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை?
25. குறியிலக்கு மேலாண்மை என்றால் என்ன?
26. பதவி உயர்வு என்றால் என்ன?
27. உரிமைப்பங்குகள் என்றால் என்ன?
28. தரமுடைய பொருட்கள் வாங்கும்போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?
29. மனோபாவச் சோதனை என்றால் என்ன?
30. நமது மூலதன சந்தையை ஒழுங்குப்படுத்தவும் மற்றும் கட்டுப்படுத்தவும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட உயர் அமைப்பு எது? நிதி அமைச்சகம் அந்த அமைப்பிற்கு வழங்கியுள்ள அதிகாரம் என்ன?

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. “வாங்குவோர் ஜாக்கிரதை” எனறால் என்ன?
32. சந்தையிடுகையாளர் ஓர் புதுமை கண்டுபிடிப்பாளரா? நீர் அதை ஏற்றுக்கொள்வீரா?
33. அரசியல் சூழ்நிலை காரணிகள் யாவை?



34. புரிந்துணர்வு ஒப்பந்தம் - சிறு குறிப்பு தருக.
35. மாற்றுச்சீட்டு மற்றும் கடனுறுதிச் சீட்டு வேறுபடுத்துக. ( ஏதேனும் மூன்று)
36. பங்குகளை முனைமத்தில் வெளியிடல் என்பது குறித்து நீவிர் அறிவது யாது?
37. நிறுமத்தின் செயல்திறனை அளவிட எத்தகைய கட்டுப்பாட்டு நுட்பங்கள் பயன்படுத்தப் படுகின்றன?
38. தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் மூன்றினை குறிப்பிடுக
39. “பகராள்” சிறு குறிப்பு வரைக.
40. அதிகப்படியான தடைகள் இன்றி, ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு எளிதாக மாற்றப்படும் சொத்துக்கள் எவ்வகையான சொத்துக்கள்? உதாரணம் தருக.

## பகுதி --- IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. செபியின் அதிகாரங்களை விவரி.

( அல்லது )

பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

42. இயக்குனரின் தகுதிகள் பற்றி எழுதுக

( அல்லது )

ஒரு வர்த்தகத்தை பாதிக்கும் சர்வதேச சுற்றுச் சூழலின் காரணிகளை விவரி.

43. காசோலையின் இயல்புகள் கூறி விளக்குக.

( அல்லது )

புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கான படிநிலைகளை விளக்குக ( ஏதேனும் ஐந்து)

44. டேலரின் மேலாண்மை தத்துவங்கள் கூறி விளக்குக.

( அல்லது )

ஊக வணிகர்களின் வகைகளை கூறி விளக்குக

45. மேலாண்மையின் முக்கிய பணிகளை கூறி விளக்குக

( அல்லது )

பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி.

46. விளக்க குறிப்பு தருக :

அ) சட்டமுறைக் கூட்டம்
ஆ) ஆண்டுப் பொதுக் கூட்டம்
இ) சிறப்பு கூட்டம்

( அல்லது )

அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி.

47. கருவூல ரசீது சந்தை மற்றும் வைப்புச் சான்றிதழ் என்றால் என்ன? மேலும் அதன் இயல்புகளை விவரி.

( அல்லது )

கடன் பத்திரங்களின் வகைகள் யாவை?